பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANADU

மலர் 20 வைகாசி 9 ஜு ஆண்டு 15 இதழ் 101
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-5-78

# ஸியா வுல் ஹக் செயலகம் திடீரெனத் தீப்பிடித்தது

ராவல்பிண்டி, மே 22
பாகிஸ்தான் பிரதம இராணுவச் சட்ட நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக் உடைமையாற்றும் செயலகம் இன்று திடீரெனத் தீப்பிடித்துக்கொண்டது!

இன்றிரவு வெளிவந்த முதல் செய்திகளின்படி, இத்தீவிபத்தினால் பலத்த சேதம் ஏற்பட்டது என்றும், செயலகத்தில் தீப்பிடித்த போது, இராணுவ நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக் செயலகத்தில் இருந்தாரா என்பது பற்றித் தெரியவில்லையென்றும் தெரிய வருகிறது.

செயலகத்திலுள்ள குளிரூட்டும் சாதனங்களிலிருந்துதான் நெருப்பு முதலில் ஏற்பட்டு, பரவியிருக்கவேண்டுமென்று கூறப்பட்ட போதிலும் நெருப்பு திடீரென ஏற்பட்டதா அல்லது சதித்திட்டமா



என்பது பற்றி உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

இத்தீவிபத்தினால் இராணுவ நிர்வாகியின் செயலகம் பலத்த சேதத்திற்குள்ளானது.

தீ விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய உடனடியாக,

[6-ம் பக்கம் பார்க்க]

## பொலிஸார் 'தேடும்' இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து

# கொழும்புக்கு உடன் கொண்டு செல்லப்படுவர்

# 28 இளைஞர் யாழ். பொலிஸ் அதிபரைச் சந்திக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

வன்செயல்கள் சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டு வருபவர்கள் என்று இரண்டாவது சுவரொட்டி மூலம் புகைப்படங்களுடன் விளம்பரப்படுத்தப்பட்ட முப்பத்தெட்டு இளைஞர்களில் சுமார் இருபத்தேழு; இருபத்தெட்டுப் பேர் இன்று காலை யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ் ரன்முத்துகல முன்னிலையில் தோற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இளைஞர்கள் உடனடியாகவே கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுவார்களென்றும் அறியப்படுகிறது.

முப்பத்தெட்டு இளைஞர்களில் அனேகமானோர் இன்று யாழ் மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ரன்முத்துகல முன் தோற்றும்போது திரு. வி. என். நவரத்தினம் யாழ் எம்.பி திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் பிரசன்னமாக இருப்பர் என்றும் அறியப்படுகிறது.

### 'நவம்' எழுப்பிய ஆட்சேபம்

''பொலிசாரால் தேடப்பட்டு வருவதாக'' முப்பத்தெட்டு இளைஞர்களின் புகைப்படங்களுடன் பொலிசார் வெளியிட்ட ''தகுந்த சன்மானம் வழங்கப்படும்'' என்ற அறிவித்தலுடன் கூடிய இரண்டாவது சுவரொட்டி சம்பந்தமாக தேசிய அரசுப்பேரவையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் சாவகச்சேரி எம்.பியுமான திரு வி. என். நவரத்தினம் ஆட்சேபம் தெரிவித்ததுடன் வீடுகளில் இருக்கும் இளைஞர்களைப் பொலிசார் தேடுவதாக வெளியிடப்பட்ட சுவரொட்டி விளம்பரங்களை வாபஸ்பெறவேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இதுபற்றிப் பேரவையில் பதிலளித்த பிரதமர் பிரேமதாசா சாவகச்சேரிப் பிரதிநிதி தெரிவித்ததன் காரணமாக இரண்டாவது சுவரொட்டி பற்றி ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறதென்று தெரிவித்திருந்தார்.

# 2-வது சுவரொட்டி விளம்பரம்

## கூட்டணி உயர்மட்ட ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

தேடப்படுவதாகவும் இவர்களைப் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படுமென்றும் முப்பத்தெட்டு இளைஞர்களின்புகைப் படங்களுடன் கூடிய இரண்டாவது சுவரொட்டி விளம்பரங்களைப் பொலிசார் வெளியிட்டது சம்பந்தமாக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி தமிழர்விடுதலைக்கூட்டணிப் பேரவைக்குழுவின் உயர்மட்டத்தினர் நேற்று ஆலோசனை நடத்தியதாக அறியப்படுகிறது.

இரண்டாவது சுவரொட்டி விளம்பரம் பற்றிப் பேரவையில் எடுத்துக் கூறியதுடன் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் நிலைமையில் எவ்விதமாறுதலும் ஏற்படவில்லையென்பது பற்றியும் இவர்கள் தமது ஆலோசனையின்போது கருத்துப்பரிமாறிக் கொண்டதாகத் தெரிகிறது.

### சட்ட நடவடிக்கை

இந்த இரண்டாவது சுவரொட்டி சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவது சம்பந்தமாகவும் இவர்கள் ஆலோசனை செய்ததாகவும் விரைவில் இதுசம்பந்தமாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாமென்றும் அறியப்படுகிறது.

## உத்தரப் பிரதேசத்தில் மட்டும்

# அனல் காற்றுக்கு 18 பேர் பலி

லக்னோ, மே, 22
உத்தரப் பிரதேசத்தில் கடந்த மூன்று தினங்களாக வீசிய அனல் காற்றினால் பதினெட்டுப்பேர் பலியாகினர்கள்!

கடந்த சில தினங்களாக இந்தியாவின் வடக்கிலும், தெற்கிலும் அனல்காற்று வீசிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலும் வீசிய அனல்காற்றுக்கு 50 பேர் பலியானதாக உத்தியோகபூர்வமற்றசெய்திகள் முதலில் தெரிவித்தன.

கடந்த மூன்று தினங்களிலும் உத்தரப்பிரதேசத்தில் வீசிய இக்கொடிய காற்றுக்கு ஆண் பூரில் தான் அதிகமானவர்கள் பலியானார்கள் என்றும், மொத்தம் 18 பேர் மாண்டனர் என்றும் இன்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் கடந்தசில தினங்களாக அனல்காற்று சற்று உச்சக்கட்டத்தை அடைந்தபோதிலும் இன்று வெப்பம் ஓரளவு தணிந்திருந்தது.

## ஜனதா வெற்றி

புதுடில்லி, மே 22
ராஜஸ்தான் சட்ட சபை இடைத்தேர்தலில் ஜனதா வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார்.

இந்திரா காங்கிரசின் ஆபேட்சகரை எதிர்த்து ஜனதா சார்பில் போட்டியிட்டவர், 12,250 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார். சுயேச்சையாகப் போட்டியிட்ட இருவரும் கட்டுப்பணத்தை இழந்தனர்.

இறக்குமதி செய்யப்பட்ட CITIZEN
மற்றும் கைக்கடிகாரங்களும் கிடைக்குமிடம்
நா. சரம்பசிவம் அன் கோ.,
யாழ்ப்பாணம்.
9347

# யாழ். பொலிஸ் அதிபரை நவம், சிவா சந்தித்தனர்

[யாழ்ப்பாணம்]

பொலிசாரால் தேடப்பட்டு வருவதாக சுவரொட்டி மூலம் புகைப்படங்களுடன் விளம்பரப்படுத்தப்பட்ட முப்பத்தெட்டு வாலிபர்களில் தற்போது தங்கள் வீடுகளில் உள்ளவர்களையும் தொழில் பார்ப்பவர்களையும் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான சாவகச்சேரி எம் பீ திரு. வி. என். நவரத்தினம் நல்லூர் எம். பி. திரு மு சிவசிதம்பரம் ஆகியோர் நேற்றுக் காலை யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ் ரன்முத்துகலவேர்னல் திரு. ரணதுங்க, உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வீரரத்ன ஆகியோரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது.

''தேடப்பட்டுவரும்'' இளைஞர்களில் பெரும்பாலானவரும் பொலிஸ் அதிபர்முன்

[6-ம் பக்கம் பார்க்க]

RECEIVED
17-5-
PERIODICALS DIVISION

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நேசனல் பனசொனிக் 5 பான்ட் ரேடியோ கசற் டேப் ரெக்கோடர் AC/DC மொடல் RQ 554 FTS இலீப் சுவிச், மெனரி றிவைண்டர், விசேட அம்சங்கள். மற்றும் மேசை மின்விசிறி. குழந்தை தள்ளுவண்டி (Pedigree மொடல்). தொடர்பு: இரா. புவனேந்திரன், பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு. 9355

வீடு, வளவு யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில், காணிகள் திருநெல்வேலியிலும், உடுவிலிலும் விற்பனைக்குண்டு. S. விசாகன், திருநெல்வேலி சந்தி. 9362

### தேவை

நன்கு அனுபவம் வாய்ந்த அச்சுக்கோப்பாளர் ஒருவர் உடன்வரவும். தமிழராஜா அச்சகம், 39/3, காங்கேசன் வீதி யாழ்ப்பாணம். 9360

## வடக்கில் இவை மாதிரிக் கிராமங்கள்

(எரணவாய்)

இவ்வாண்டு யாழ். மாவட்டத்தில் இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் மாதிரிக் கிராமங்களாக அச்சுவேலி, புலோலி என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளைச் சேர்ந்த இலங்கை குடும்பத் திட்டச் சங்கத் தொண்டர்களுக்கு அடுத்த மாதப் பிற்பகுதியில் ருகம்பில் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன. (அ)

## விமரிசையாக நடைபெற்ற வெசாக்

(கொழும்பு)

வெசாக் தினத்தை யொட்டி தலைநகரிலும் ஏனைய பகுதிகளிலும் விமரிசையான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கொழும்பில் அலங்காரப் பந்தல்கள் பெருமளவில் அமைக்கப்பட்டிருந்தன.

இ. போ. ச. ரயில்வே பகுதியினர் விசேட சேவைகளை ஒழுங்குசெய்திருந்தனர். (உ)

## வவுனியா விவசாயிகள் கவலை

(வவுனியா)

வவுனியா பொலிஸ் அதிபர் பகுதியிலுள்ள விவசாயிகளின் தும் மற்றவர்களினதும் அனுமதிப்பத்திரமுள்ள துப்பாக்கிகள் அனைத்தையும் பொலிசார் கைப்பற்றியிருக்கிறார்கள். பொலிஸ்பகுதி அல்லாத இடங்களில் கிராமசேவகரின் உதவியுடன் உதவி அரசாங்க அதிபர்கள் துப்பாக்கிகளைக் கைப்பற்றிவருகிறார்கள். தமது பயிர்களை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாக்கமுடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளார்கள். (அ)

சேக்கிழார் விழாவைச்சிறப்பிக்க

## புலவர் திலகம் கீரனும் மனைவியும் யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜூன் 10, 11ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் சேக்கிழார் விழாவின்போது சிறப்புச் சொற்பொழிவாற்றத் திருவாவடுதுறை ஆதீனவித்துவான் புலவர் திலகம் கீரனும் அவரது துணைவியார் திருவாட்டி செல்லப்பாப்பா கீரனும் ஈழம் வருகின்றனர். அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

பட்டிமன்றம், பண்ணிசைக் கச்சேரி, சொற்பொழிவுகள், புராணபடனம் முதலான நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

இவ்விழாவையொட்டி ஜூன் 15ம் தேதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சொக்கன் எழுதிய தெய்வப்பாவை நாடகம் அரங்கேறுகிறது. பிரபல தெறியாளர் எஸ். டி. அரசு இயக்கும் இந்நாடகத்தில் பிரபல கலைஞர்கள் பலர் பங்கெடுக்கின்றனர். (அ)

## "பதவியில் அல்ல சேவையில் போட்டி வேண்டும்"

— உதவி அரசாங்க அதிபர்

(வண்ணார்பண்ணை)

"கிராமங்களில் இயங்கும் பொதுஸ்தாபனங்களின் நிர்வாகங்களில் போட்டி பூசல்கள் தவிர்க்கப்படவேண்டும். பதவிகளைப் பிடிப்பதற்குப் போட்டி போடுவதைத் தவிர்த்து சேவை செய்வதற்காகப் போட்டிகள் இடம்பெற வேண்டும்."

இவ்வாறு தீவுப்பகுதி தெற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். தம்பிமுத்து மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மண்டைதீவுக் கிராமசபை மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் திரு. தம்பிமுத்து மேலும் கூறியதாவது: கிராமத்தில் சமூக சேவை செய்பவர்கள் மத்தியில் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் கிராம அபிவிருத்தியில் சகலரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். சமூக சேவையில் ஈடுபடுபவர்கள் சகலரும் தமது கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளில் சமூக முன்னேற்றப் பணிகளில் ஒற்றுமையாக உழைக்கவேண்டும்.

சங்கங்களில் பதவிகளை வகிப்பதற்கு போட்டி போடலாம், அப்போட்டிகள் நிரந்தரமானதாக இருக்கக்கூடாது. கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் கிராமத்தின் அபிவிருத்தி வேலைகள் தங்கியுள்ளன. இச்சங்கங்களின் உதவியுடனே அரசு கிராம முன்னேற்ற வேலைகளையும், கிராம அபிவிருத்தி வேலைகளையும் செய்கின்றது.

இவ்வேலைகளைச் செய்வதற்கு கிராம மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இயங்க வேண்டும். போட்டிகள் வேற்றுமைகளை மறந்து செயல்படுவதாலே தான் கிராமத்தை அபிவிருத்தி செய்யமுடியும் என்றார்.

தீவுப்பகுதி தெற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. விஜயநாதன் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு புதிய நிர்வாகிகள் தெரிவை நடத்தினார்.

இச்சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. அமிர்தலிங்கம், செயலாளர்: திரு. இ. ஜெயலிங்கம், பொருளாளர்: திரு. ச. குலராசா. (உ)

## பொங்கல் விழா

(எரணவாய்)

கொற்றாவத்தை கண்டுப்புளியடி வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இம்மாதம் 26ந் திகதி நடைபெறவுள்ளது. மலேஷிய அன்பர் ஒருவர் இவ்வாலயத்திற்கு மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடுத்துள்ளதுடன், மின்சார வசதியையும் செய்து கொடுத்துள்ளார். (அ)

......

## சங்கானையில் கண்திறந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். கலைமன்றத்தின் கண் திறந்தது என்ற சமூக சீர்திருத்த நாடகம் 26-வது தடவையாக நடந்த சனிக்கிழமை சங்கானையில் மேடையேறியது. வி. பி. தாசன் எழுதி நெறிப்படுத்திய இந்நாடகம் பல தங்கப்பதக்கங்களைப்பெற்றது குறிப்பிடத் தக்கது. 'மாதாகோயில் மணியோசை' திரைப்படத்தில் முக்கிய பாத்திரமாக நடிக்கும் பி. இக்னேஷியஸ் உட்படப் பரிசு பெற்ற நடிகர்கள் பங்குபற்றும் இந்நாடகம் சங்கானையில் பலத்த பாராட்டுகளைப் பெற்றது. (அ)

## பரிசுபெற்ற சிறுகதைகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 15 ஆண்டுகள் பத்திரிகைத்துறையில் தன்னிகரற்ற பணியாற்றி வரும் 'மித்திரன்' சஞ்சிகையை பாராட்டி மாணவர் முரசு பத்திரிகையால் நடாத்தப்பட்ட மித்திரன் சிறுகதைப்போட்டி முடிவு வெளியாகியுள்ளது.

பருத்தித்துறை பாலா அசோ எழுதிய "வெறி" என்ற சிறுகதை முதலாம் இடத்தையும் கே. ஆர். டேவிட் அம்பிகையாகன் ஆகியோர் எழுதிய "வேலத்தை நோக்கி விரட்டப்பட்டவர்கள் உணர்வில் உணர்ச்சிகள் பிறக்கின்றன" என்ற இரு சிறுகதைகளும் இரண்டாம் பரிசையும் மருதூர் அலிகான் எழுதிய "ஒரு புதிய பாடம் ஆரம்பமாகின்றது" என்ற சிறுகதை மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (கா)

## பாட்டரி தட்டுப்பாடு

(எரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் பாட்டரிக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் வானொலி பாவனையாளர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். சில தனியார் கடைகளில் பாட்டரி ஒன்று மூன்று ரூபாவுக்கும் விற்கப்படுகிறதாம். (அ)

## அரபுநாடுகள் மாநாடு

டமாஸ்கஸ், மே 22

இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எகிப்து வலியுறுத்துவதனை தவிர்க்கும்வரை அரபுநாடுகளின் உச்சிமாநாட்டு முயற்சியை நிராகரிப்பதென்று பலஸ்தீனிய விடுதலை இயக்கம் முடிவுசெய்துள்ளது.

இம்முடிவுபற்றிய அறிக்கையை பலஸ்தீனிய விடுதலை இயக்கம் டமாஸ்கஸில் வெளியிட்டது.

எகிப்தின் போக்கில் மாற்றம் ஏற்படாதவரை அரபு நாடுகளின் உச்சிமாநாட்டு முயற்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மேற்படி இயக்கம் தெரிவித்துள்ளது. (உ)

## நோயாளர் ஏமாற்றம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம சபை ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்து வகைகள் இல்லாததால் நோயாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். தினமும் நோயாளர்கள் பலர் பலத்த ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். (உ)

## தேவாலயம் அமைக்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயமொன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை கத்தோலிக்க சங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது. வைத்தியசாலை வளவில் அவ்வாலயத்தை அமைப்பதற்கான அனுமதியை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது. (அ)

## அனல்காற்றால் விளைந்த அனர்த்தங்கள்

புதுடில்லி, மே 22

வடக்கு தென் மாநிலங்களில் அனல் காற்றுக்கு பலர் மாண்டுள்ளனர், பறவைகள் யாவும் மடிந்துள்ளன.

சென்னையில் அனல்காற்று பலமாக வீசுகிறது.

பீகாரில் அனல்காற்றுக்கு 86 பேர் மாண்டனர். (உ)

## சுழிபுரம் வந்தார் 'சூரியர்'

(சுழிபுரம்)

சுழிபுரம் பறளாய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டு முன்னாள் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றினார். சுழிபுரம் வந்த அவரை அவரது ஆதரவாளர்கள் பலரும் வரவேற்றனர். (உ)

## அம்மன் உற்சவம்

(சுழிபுரம்)

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்மன் கோயில் திருவிழா சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தினமும் மாலைப் பூசையைத் தொடர்ந்து அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி மகாபாரத விரிவுரையை நிகழ்த்தி வருகின்றார். எதிர்வரும் 29ந் திகதி திங்கட்கிழமை மகாபாரத விரிவுரை பூர்த்தியடையும். (உ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ 5ம் திருவிழா இன்று நடைபெறுகிறது.

பகல் விசேஷ அபிஷேக ஆராதனையும் அம்பாள் வீதியுலாவும் நடைபெறும். விசேட மேளக்கச்சேரியும் கண்ணன் கோஷ்டியினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும். (உ)

0

கொக்குவில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோயில் (புதுக்கோயில்) பூங்காவன விழாவில் அல்புக்கடல் வி. கி. கே. ஆறுமுகம் குழுவினரின் "கருணைக்கு அருணகிரி" என்னும் பொருளில் வில்லிசை விருந்து இன்று நடைபெறவுள்ளது.

0

பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா அவர்களினால் நிகழ்த்தப்பட்டுவந்த "கந்தபுராண விரிவுரை இன்று வள்ளி திருமணத்துடன் பூர்த்தியாகின்றது. (உ)

**கோண்டாவிலில்**

கோண்டாவில் மேற்கு ஞானவைரவர் கோயில் அலங்காரத்திருவிழாவை முன்னிட்டு "ஞானசாகர வாரிதி" நீராவியடி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா பாகவதரினால் நிகழ்த்தப்பட்டுவரும் கம்பராமாயண விரிவுரையில் இன்று "பாதுகா பட்டாபிஷேகம்" என்னும் பொருள்பற்றி விரிவுரை நடைபெறும். (உ)

## தீவுப்பகுதி விளையாட்டுப் போட்டி

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி தெற்கு விளையாட்டதிகாரிபிரிவு வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை இப்பிரிவு விளையாட்டதிகாரி மேற்கொண்டுள்ளார்.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றிடமிருந்து இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தீவுப்பகுதி விளையாட்டதிகாரி பிரிவு இரண்டாகப் பிரிக்கப்பட்டபின் இம்முறையே இப்போட்டிகள் வேலணைப் பிரிவில் நடைபெறவிருக்கின்றன.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், நீளம்பாய்தல், உயரம்பாய்தல், கெந்திஅடிவைத்துப்பாய்தல், குண்டெறிதல், பரிதிவட்டம் வீசுதல், ஓட்டப் போட்டிகள், அஞ்சலோட்டம் ஆகிய விளையாட்டுக்கள் ஆண் பெண் இருபாலாருக்குமிடையில் நடைபெறவிருக்கின்றன. கழகங்களிடமிருந்து இம்மாதம் 26ம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்கப்படவுள்ளன.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


உ

இஷ்டலிங்காய நம!

**ஆசார்யாபிஷேக அழைப்பிதழ்**

காலம்: வைகாசி 10-ம் நாள் புதன்கிழமை 11 மணிக்கு (24-5-78)

இடம்: உரும்பராய் ஞானவைரவர் கோவில்

இவர்: சிவஸ்ரீ க. வயிரவநாதஐயர்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு வேண்டுகிறோம்.

வரவேற்பாளர்கள்
சிவஸ்ரீ பொ. கந்தையாக் குருக்கள்
சிவஸ்ரீ ஐ. கைலாயதேசிகர்
சிவஸ்ரீ ஐ. செல்வரத்தினக் குருக்கள்

9357





கம்பவுண்ட் கதவுகள்.
இவைகளுக்கு:
இராஜா இரும்புத் தொழிற்சாலை
க. ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்
9344

ஈழநாடு
The Eelanaadu

## மாணவர்களுக்கு விவசாயம்

பாடசாலை மாணவர்களை விவசாயத்தில் ஊக்குவிப்பதற்காக 'மாணவர் விவசாய முன்னணி' ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை காணி விவசாய அமைச்சர் தெரிவித்திருக்கிறார். மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடந்த விவசாய உற்பத்தி தொடர்பான 'வட்டாரக் கல்வி அதிகாரிகள் விவசாய ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் முதலானோரின் கூட்டத்திலேயே காணி விவசாய அமைச்சர் 'மாணவர் விவசாய முன்னணி' பற்றித் தெரிவித்தார்.

இருபத்திமூன்று லட்சம் மாணவர்கள் தற்பொழுது பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு பத்தாயிரத்து ஐநூறு ஏக்கர் காணிகளும் இருக்கின்றன.

மாணவர்களைத் தேசிய விவசாயத்தில் ஈடுபடுத்தி அதன் மகிமையை வெளிப்படுத்துவதே மாணவர் விவசாய முன்னணியின் நோக்கமென்று கல்வி அமைச்சர் நிஸங்கா விஜயரத்தின கூறியிருக்கிறார்.

மாணவர்களுக்கு விவசாயத்தில் பயிற்சி அளிப்பது வரவேற்கத்தக்கது. இதற்கு முன்னரும் உணவு உற்பத்தி இயக்கம், துரித உணவு உற்பத்தி இயக்கம் ஆகியவை ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட போதும் மாணவர்கள் விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாணவர்களை வயல்களில் களை பிடுங்குவதற்கு விடப்பட்டபோது "புல்லைப் பிடுங்குவதற்குப் பதிலாக நெல்லைப் பிடுங்கினர்" என்று கிண்டலாகக்கூடச் சிலர் பேசினர்.

ஆனாலும் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட தோட்டச் செய்கை இன்னும் சில பாடசாலைகளில் பயனளித்துக் கொண்டுதானிருக்கின்றது.

நாட்டின் பல பகுதிகளில் குறிப்பாக வடபகுதியில் இன்றும் பல பிள்ளைகள் அதிகாலையிலேயே எழுந்து தங்கள் தந்தை, சகோதரர்களுடன் தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் சென்று உதவி செய்துவிட்டுப் பாடசாலைக்குச் சென்று படித்துப் பின்னர் மாலையிலும் தோட்டத்திலும் வயலிலும் உதவி செய்வதும் வழக்கம்.

பரம்பரையாக விவசாயத்திலீடுபட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு விவசாயத்தின் மகத்துவத்தைப்பற்றி எடுத்துக் காட்டவோ விவசாயத்தில் பயிற்சியளிக்கவோ வேண்டிய அவசியமில்லை.

பரம்பரை விவசாயக் குடும்பத்தில் பிறந்தும் தோட்டங்களிலும் வயல்களிலும் இறங்குவது இழுக்கு என்று சில காலத்துக்கு முன்னர் எண்ணிய சிலர் உத்தியோக மோகத்தில் மூழ்கி அலைந்ததுமுண்டு. இன்று அந்த நிலை முற்றாக மாறிவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

விவசாயத்தில் மாணவர்களை ஈடுபடுத்துவதும் அவர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டியதும் விவசாயத்தையே தனது பொருளாதாரத்துக்குப் பெரும்பாலும் நம்பியிருக்கும் இலங்கை போன்ற நாட்டுக்கு அவசியமாகும்.

இதேசமயம் பாடசாலைகளில் மட்டும் விவசாயத்தில் பயிற்சியளித்தால் போதாது. பல்கலைக்கழகங்களிலும் விவசாயப்பீடங்கள் அமைக்கப்படுவதும் அவசியமாகும். விவசாயப் பட்டப்படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் இடமிருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டால் அதிகமான மாணவர்கள் விவசாயப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்வருவர் என்று எதிர்பார்க்கலாம்.

---

### நீதிமன்றம் போல் காட்சியளித்த ஆட்சிமன்றம்:

# "சிக்காக்கோவை மிஞ்சும் இலங்கை"

— நீதியமைச்சர்

# "நீதிபதிகள் மீது பழிசுமத்துவதா?"

— நல்லூர் எம். பி.

குற்றவியல் நடவடிக்கை முறை (இறப்பேற்பாடுகள்) சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பின் மீதான விவாதத்தை நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆரம்பித்துப் பேசினார்.

நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையதான இச்சட்ட மூலத்தின் விவாதம் நீதிமன்றம் ஒன்றில் நிகழ்கின்ற ஒரு சட்ட வாதம் போலவேதான் இருந்தது.

அரசாங்க தரப்பிலுள்ள வழக்கறிஞர்களுக்கும் எதிர்க்கட்சியிலுள்ள வழக்கறிஞர்களுக்குமிடையே பலத்த சட்ட வாதம் நிகழ்ந்தது. குத்தலான குறுக்கீடுகளுமிருந்தன.

நீதியமைச்சர் திரு. தேவநாயகம் விவாதத்தை ஆரம்பித்துப் பேசுகையில்—

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னெப்பொழுதுமேயில்லாதவாறு குற்றச்செயல் நாட்டில் அதிகரித்திருப்பதாகவும் சிக்காக்கோ நகரையேவென்று விடும்போலிருக்கிறதென்றும், இவற்றைத்தடுத்து, பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்துவது அவசியம் என்றும் குறிப்பிட்டு, கடந்த ஐந்து மாதங்களுள் நடைபெற்ற குற்றச் செயல்களின் விபரங்களையும் தெரிவித்தார்.

அமைச்சர் தெரிவித்த தகவலின்படி, 524 கொலைகளும், 7 வங்கிக் கொள்ளைகளும், 33 வழிப்பறிக் கொள்ளைகளும், 36 வாகனத் திருட்டுக்களும், ரூபா 5000க்கு மேற்பட்ட 144 கன்னத் திருட்டுக்களும் ரூபா 10,000க்கு மேற்பட்ட கன்னத் திருட்டுக்கள் 131-ம், வீட்டுக் கொள்ளைகள் 43-ம், ரூபா 5000க்கு மேற்பட்ட 14 கூட்டுறவுச்சங்கக் கொள்ளைகளும் நடைபெற்றிருக்கின்றன.

### பிணையில் விடுவதே குற்றங்களுக்குக் காரணமாம்

இவையனைத்தும் நீதிநிருவாகச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், சந்தேக நபர்களைப் பிணையில் விடுதலை செய்வதாலேயே நிகழ்வதாக அமைச்சர் கூறினார். பிணையில் விடுதலையாகும் இவர்களே மீண்டும் இச்செயல்களில் ஈடுபடுவதாகவும் கூறிய அவர் தமது கூற்றுக்கு ஆதாரமாக சில நபர்கள் சம்பந்தப்பட்ட விபரங்களையும் அளித்தார்.

### சில ஆதாரங்கள்

எஸ். கே. சோமலிங்கம் என்பவர் 31-10-76ல் கொலைக் குற்றமொன்றுக்காக றிமாண்டில் வைக்கப்பட்டு பின்னர் 6மாதங்களில் பிணையில் விடப்பட்டபோது 17-3-78ல் மீண்டும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டாரென்றும், சட்டத்தின் வலுவின்மையைக் கண்ட அவரால் காயப்படுத்தப்பட்டவர்கள் சிலர். அவரை நீதிமன்றத்துக்குக் கொண்டு வரும்போதே அவரைக் கொலை செய்ததாகவும் அமைச்சர் கூறினார்.

ரொக்கம் ரூபா 6,770 இருட்டு வழக்கொன்றில் பிணையில் விடப்பட்ட கிறிஸண்டா என்பவர் பின்னர், தங்கச் சங்கிலி ஒன்றைத் திருடியமைக்காக மீண்டும் நீதிமன்றம் கொண்டுவரப்பட்டு மீண்டும் பிணையில் விடப்பட்டபோது ரூபா 3,550 பெறுமதியான இன்னுமொரு தங்கச் சங்கிலியைத் திருடி, அப்போதும் பிணையில் விடப்பட்டபோது ரூபா 795 ரொக்கப்பணத்தைத் திருடி அதிலும் பிணையில் விடப்பட்டாரென்றும், பின்னர் ரூபா 350 ரொக்கப் பணத்தைத் திருடி அதற்குப் பிணையில் விடப்பட்டார். மீண்டும் ரூபா 5,275 ரொக்கத்தை 'லைவ்' சாலை ஒன்றில் திருடிய அவர் இன்னமும் பிடிபடவில்லை என்றும் சொன்னார்.

இவ்வாறே அங்கொண சந்திரே என்பவர் பிணையில் விடப்பட்டபோது 24 கொள்ளைகளில் ஈடுபட்டதாகவும், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள சந்திரதாச என்பவர் 51 வழக்குகளில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் குற்றவாளிகளைப் பிணையில் விடுவதுடன் ஒத்தி வைக்கப்பட்ட தண்டனைகளை அளிப்பதும் இந்நிலைக்கு காரணம் என்றார்.

### பொறுப்புணர்வுடன் பேணவேண்டும்

நீதிபதிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையை பொறுப்புடன் பேண வேண்டும் என்றும் இதுவரை அப்படிப் பேணப்படாததால் அதனை மட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது என்றும் அதைத்தவிர, வேறு எம்மாற்றத்தையும் தாம் மேற்கொள்ளவில்லை என்றும் கூறினார்.

நீதியமைச்சரை அடுத்து, எதிர்க்கட்சிகளின் தரப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழுவின் துணைத் தலைவரும் நல்லூர் உறுப்பினருமான திரு. எம். சிவசிதம்பரம் விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார்.

### 'சிவா' ஆரம்பித்தார்

தனக்கேயுரிய மிடுக்கான தொனியுடன் சட்ட மூலத்தின் பல்வேறு பிரிவுகளையும் நுணுக்கமாக அலசி, சபையில் எழுந்த குறுக்கீடுகளுக்கு விட்டுக் கொடுக்காமல் தன்னுடைய வாத நுணுக்கங்களைத் தெளிவாக வலியுறுத்தி அவர் வாதிட்டார்.

திரு. சிவசிதம்பரம் தமது வாதத்தின் ஆரம்பத்திலேயே இச்சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கான காரணம்பற்றி நீதி அமைச்சர் தெரிவித்த கருத்தை வன்மையாக ஆட்சேபித்தார்.

"பல்லாண்டுகாலமாக இந்நாட்டில் இருந்துவரும் குற்றவியல் சட்டத்தை மாற்ற முயலும் அமைச்சர் அதற்குக் காரணமாக கடந்தகாலங்களில் பிணை அனுமதிப்பது தொடர்பாக நீதிபதிகள் தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள்

— மாலி —

என்று நீதிபதிகள்மீது பழி சுமத்துகிறார்" என்று சொன்னதும், தொழில் அமைச்சர் திரு. ஸி. பி. ஜே. செனிவிரத்தின குறுக்கிட்டு "அமைச்சர் அவ்வாறு கூறவில்லை" என்றார்.

"அவர் அப்படிக் கூறினார்" என்ற திரு. சிவசிதம்பரம், நாட்டின் எந்தப்பகுதியிலும் நீதிபதிகள் பிணைவழங்கும்போது அவர்களுக்குள்ள தற்றுணிபை மிகவும் மதித்து எப்பொழுதும் நீதியாகவே நடந்துவந்திருக்கிறார்களென்பதை 20 வருட சட்டத்துறை அனுபவத்திலிருந்து நான் துணிவாகவே கூறுவேன் என்றவர்,

### எந்த நீதிமன்ற தீர்ப்பு இது?

'நீதியமைச்சர் ஒரு கட்டத்தில் கொலைக்குற்றவாளி ஒருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை அளிக்கப்பட்டதாகவும் கூறினார். எந்த மாவட்ட நீதிமன்றம் அப்படியொரு தீர்ப்பை வழங்கியதோ எனக்குத் தெரியாது. ஏனெனில் ஒருவர் கொலைக்குற்றவாளியாக காணப்படின் அவருக்குள்ள ஒரே தண்டனை மரணதண்டனையே. அதனை ஒருமுறைதான் வழங்க முடியும். அதன் ஒருபகுதியை ஒத்திவைக்கமுடியாது' என்றார்.

இச்சட்டமூலம் கடந்த ஆறு மாதங்களாக பேசப்பட்டுவந்த அரசின் கொள்கையை முற்றிலும் மாற்றி அமைக்கிறது என்று அவர் கூறவும் தொழிலமைச்சர் மீண்டும் குறுக்கிட்டு "குற்றவாளிகளுக்கு மட்டுமேயன்றி நல்லவர்களுக்கு அல்ல" என்றார்.

"இது எனக்குத் தெரியும், நீங்களும் ஒரு குற்றவாளியாக ஒருவருடன் மறியலில் இருந்தீர்கள்" என்றார் திரு. சிவசிதம்பரம்.

### நிரந்தர அவசரகால சட்டம்

அவசரகாலச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டவற்றை நீங்கள் நிரந்தர சட்டத்தின்கீழ் செய்ய முயற்சிக்கிறீர்கள் என்று திரு. சிவசிதம்பரம் கூறவும் கொத்மலை உறுப்பினர் திரு. ஆனந்த தஸநாயக்கா (சு-க) "நிரந்தர அவசரகாலச்சட்டம்" என்றார்.

ஐ. நா. வால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை மறந்து பிரஜை ஒருவரின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்று திரு. சிவா கூறவும் அரசாங்க உறுப்பினர் ஒருவர் கொலைகாரரின் சுதந்திரம் என்றார்.

கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டாலொழிய அவன் கொலைகாரன் அல்ல இது நீதித்துறையின் அடிப்படைத் தத்துவம் உமக்கு இது தெரியாமலிருக்கலாம் ஆனால் மற்றெல்லோரும் அறிந்தது இது என்று அவ்வுறுப்பினரைப் பார்த்து திரு. சிவசிதம்பரம் கூறவும் விவசாயகாணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா

மேலும் கொலைகளை அவன் செய்வதற்கு நீங்கள் சுதந்திரமளிக்கிறீர்கள் என்று சொல்லவும் திரு. சிவசிதம்பரம்

முன்வரிசையிலிருந்தாலும் குற்றச்சட்டத்தின் அடிப்படைத்தத்துவங்களை அறியாதவர்களுடன் நான் பேச விரும்பவில்லை என்றார்.

### இப்பிரச்னையை சுலபமாகதீர்க்கலாம்

கொள்ளைகள் புரிவோர் தண்டனை முடிந்து வந்தபின்னரும் அவற்றில் ஈடுபடவே தான் செய்வார்கள் என்று சொன்ன அவர்

பிணையில் விடுதலை செய்யப்பட்ட ஒருவர் இன்னொரு கொலையில் குற்றம் சுமத்தப்பட்டுநீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டபோது அவர்கொலை செய்யப்பட்டதை நீதி அமைச்சர் வரவேற்கிறாரா? திருடன். கொலைகாரன் என்று பொலிசார் கூறும் ஆளைவரையும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் சிறையில் வைத்திருக்கும்படியாக குற்றவியல் நடவடிக்கைக் கோவைக்கு திருத்தமொன்றை அமைச்சர் கொண்டு வந்தால் சுலபமாகவே இப்பிரச்னையைத் தீர்த்துவிடலாமே என்றும் திரு. சிவசிதம்பரம் சொன்னார்.

ஒருவரைக் கைது செய்தபின் பொலிசார் அவரைக் கைது செய்வதற்காக காரணங்காட்டிய 'பி' அறிக்கை ஒன்றை நீதவானிடம் சமர்ப்பிக்கிறார்கள். அந்த அறிக்கையை நன்கு ஆராய்ந்த பின்னரே நீதிபதிகள் கைது செய்யப்பவருக்கு பிணை வழங்குகிறார்கள்.

### பல்வேறு காரணத்துடன் கைது செய்யலாம்

பொலிசார் அரசியல் காரணங்கள், தனிப்பட்ட காரணங்கள் இப்படிப் பல்வேறு காரணங்களுக்காக ஒருவரைக் கைது செய்து பிணையின்றி வைத்திருக்க இச்சட்டம் வகை செய்கிறது.

இப்படிப் பொலிசாரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்ட இரு அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்த போதிலும் அவர்கள் இதனை எதிர்க்காதது குறித்து நான் கவலை அடைகிறேன் என்று திரு. சிவசிதம்பரம் கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

---

## வில்லூன்றிப் பிள்ளையார் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் இம்மாதம் 27ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. வேட்டைத் திருவிழா அடுத்த மாதம் 3ம் திகதியும் தேர்த் திருவிழா 4ம் திகதியும் அடுத்த நாள் தீர்த்தமும் நடைபெறும்.

உற்சவநாட்களில் தமிழ்மணி க. கணேசசுந்தரனின் கதாப்பிரசங்கமும், திருமதி கனகாம்பிகை ஜெகநாதனின் திருமுறைக் கச்சேரி, திரு. மு. இளையதம்பி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ஆகியோரின் சொற்பொழிவு, திரு. ஞானசம்பந்தனின் மணிஓசை முதலியனவும் இடம் பெறும். (க)

---

## மணிவாக்கு

பழிக்குப்பழி வாங்க நினைப்பது பண்பான செயலல்ல தீமை செய்தோர்க்கும் நன்மையே செய்ய முயலவேண்டும்.

—எமர்ஸன்

தமிழக அரசு

# தலைமைச் செயலகம் முன்

## மறியல் செய்ய விவசாயிகள் முடிவு

சென்னை, மே 22

தமிழ்நாட்டில் விவசாயிகள் போராட்டத்தால் மேலும் பதட்டநிலை உருவாகக்கூடிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

திரு. ஜி. நாராயணசாமி தலைமையிலான விவசாயிகள் சங்கம் தமது கோரிக்கைகளை முன்வைத்து சென்னையில் தமிழக அரசு தலைமைச் செயலகத்தின் முன் மறியல் செய்வதற்கு முடிவு செய்துள்ளது.

### கோவையில் கூடினர்

சங்கத்தின் செயற்குழு கோயம்புத்தூரில் கூடி தற்போதைய நிலைமை ஆராய்ந்தது. தமிழக அரசினால் விவசாயிகள் போராட்டத்தின் போது தாக்கல் செய்யப்பட்ட சிவில், கிரிமினல் வழக்குகள் வாபஸ் பெறப்படாதது குறித்து கூட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

### வரிகொடா இயக்கம்

வரிகொடா இயக்கம் முதலான தமது போராட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது என முடிவு செய்யப்பட்டது.

### ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் உண்ணாவிரதம்

இம்மாதம் 31-ந் திகதி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பும் தாலுகா அலுவலகம் முன்னும் அடையாள உண்ணாவிரதம் இருப்பதென்றும் அடுத்த மாத நடுப் பகுதியில் தமிழக அரசு தலைமைச் செயலகம் முன் மறியல் செய்வதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடந்த சில வாரங்களுக்கு முன் தமிழகத்தில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் ஐவர் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (உ)

ஸ்தலஸ்தாபன தேர்தலில்

## மலையக வாக்காளருக்கு அந்தஸ்து

(வெள்ளவத்தை)

இலங்கைப்பிரஜாவுரிமை பெற்ற மலையகம் வாழ் இந்திய வம்சாவழி மக்கள் அண்மைக்காலம் வரை பொதுத்தேர்தலில் மட்டுமே வாக்களிக்கும் உரிமையினைப் பெற்றிருந்தார்கள். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் தேசிய அரசபேரவையில் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கை காரணமாக இலங்கைப்பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்ட இந்திய வம்சாவளி மக்கள் ஒவ்வொருவரும் மாநகரசபை கிராமசபை, பட்டினசபை ஆகியவற்றிற்கு வாக்களிக்கும் அந்தஸ்தினை இப்பொழுது பெறுகின்றார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தமது மாநில அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ள ஒருசுற்றறிக்கையில் கிராமசபை, பட்டினசபை மாநகரசபை முதலிய பிரிவுகளில் பதிவு வேலைகள் நடைபெறும் பொழுது பதிவேட்டில் உள்ள பெயர்களையும் புதிதாகச் சேர்க்கப்படும் பெயர்களையும் நீக்கப்படும் பெயர்களையும்பற்றிய விஷயங்களில் கண்காணிப்பாயிருந்து பொதுமக்களுக்கு இ. தொ. கா. மாநில அதிகாரிகள் உதவியாக இருக்க வேண்டும் வட்டார ரீதியாக நியமிக்க விருக்கும் இத்தகைய நபர்களின் தெரிவில் மாவட்ட மாநில பொறுப்பதிகாரிகள் உட்பட அக்கறையுடைய பொதுநல சேவையாளர்களையும் கலந்து செயல்படுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகராட்சி மன்றத்தேர்தலுக்கு போட்டியிடுவதற்குரிய நடவடிக்கையிலும் இ. தொ. கா. செயல்பட்டுவருகிறது.

## "விவசாயிகளுக்கு ரூ. 140 கோடி கடனுதவியாக வழங்குவோம்"

### — அமைச்சா கிருஷ்ணசாமி

சென்னை, மே 22

விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் தமிழ்நாடு அரசு 140 கோடி ரூபாவைக் கடனுதவியாக வழங்கும் என்று தமிழ்நாடு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இதனை அறிவித்தார்.

விவசாயிகள் நல்வாழ்வுக்காக தமிழ்நாடு அரசு தன்னாலியன்ற சகலதையும் செய்யும் என்றும் அமைச்சர் சொன்னார்.

இவ்வைபவத்திற்கு தகவல் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தலைமை வகித்தார். விவசாயிகளுக்கு அரசு செய்துள்ள பணிகள் பற்றியும் விவரிக்கப்பட்டது. (உ)

### இவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும்

(கொழும்பு)

கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் இருந்து முன்னாள் நிர்வாகத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படும் என்று நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சர் திரு. காமினி திஸநாயகா அறிவித்தார்.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (உ)

### ஜெகஜீவன்ராம் பயணம்

புதுடில்லி, மே. 22

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். (உ)

### தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, மே 22

சர்க்காரியா கமிஷன் அறிக்கைமீது சட்ட நிபுணரின் ஆலோசனை பெறப்பட்ட பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரச அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய அரசு இவ்வறிக்கையை தமிழக அரசிடம் ஒப்படைத்துள்ளது தெரிந்ததே. (உ)

# எகிப்துக்கு யு.எஸ். ஜெட் விமானங்கள்:

## இஸ்ரேல் கவலை

டெல்அவிவ், மே 22

சவூதி அரேபியாவுக்கும் எகிப்துக்கும் ஜெட்விமானங்களை வழங்க அமெரிக்கா முன்வந்திருப்பது குறித்து இஸ்ரேல் கவலை தெரிவித்துள்ளது.

ஜெருசலத்தில் அரசு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இப்போக்கு மத்தியகிழக்கு நிலையில் மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்றும் அவர் சொன்னார்.

இஸ்ரேலின் அரசாங்க எம். பிக்கள் பலரும் அமெரிக்காவின் இப்போக்கையிட்டு கவலை கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (உ)

# கர்நாடக முதல்வர் தமிழகம் வருவார்

## இந்திரா காங். வரவேற்கும்

சென்னை, மே. 22

கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் தமிழ்நாட்டுக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டுவரவிருக்கிறார்.

அடுத்தமாதம் 4-ம், 5-ம் திகதிகளில் சென்னைவரும் இவருக்கு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸார் வரவேற்பளிப்பார்.

இவ்வரவேற்பு தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் தலைமையில் நடைபெறும். (உ)

### இலங்கைப் பிரதிநிதி

(கொழும்பு)

ஜப்பானில் நடைபெற்ற கனி வைத்தியம் சம்பந்தமான மாநாட்டில் இலங்கையின் சார்பில் இந்திரா விஜேந்திராஜா இவலோசகம் கலந்துகொண்டார். (உ)

## சிக்காக்கோவை .....

தொழில் அமைச்சர் குறுக்கிட்டு—

"அப்படி எவரும் இருப்பதாக தான் கருதவில்லை" என்று கூறவும் திரு. சிவசிதம்பரம்—

வர்த்தக அமைச்சர் அத்தகைய அனுபவம் பெற்றவர் — இரு வாரங்களின் பின்னர் அவர் எழ்வித குற்றச்சாட்டுமின்றி விடுதலைசெய்யப்பட்டார் என்றார்.

அப்போது நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா "அது அரசியல் கைது" என்றார்.

### விதிவிலக்கை தீர்மானிப்பது யார்?

"அப்படி நிலைமைகள் இனியும் ஏன் ஏற்படாது?" என்று கேட்ட திரு. சிவசிதம்பரம், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டும் பிணை வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே அந்த விதிவிலக்கை தீர்மானிப்பது யார்? என்று கேட்க, "பொலிசார்" என்று சொன்னார் திருமதி இறிமா சேனா.

அவசரகால நிலைமைகளில் கூட சட்டமா அதிபரோ, நீதி அமைச்சரின் செயலாளரோ பிணைவழங்க முடிந்தது. ஆனால் இச்சட்டமூலத்தின்படி உயர் நீதிமன்றம் மட்டுமே அதுவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே பிணை வழங்க முடியும் என்று கூறிய திருமதி இறிமா, நீதிபதிகள் பிணை வழங்குவதில் எவ்வளவு பொறுப்புடன் நடந்தார்கள் என்பதை உணர்த்த, 1962 சதி முயற்சி வழக்கில் ட்ரயல்-அட்-பார் நீதிபதிகள் குறிப்பாக பிரதம நீதியரசர் சன்சோனி எதிரிகளுக்கு பிணைவழங்க மறுத்ததைச் சுட்டிக்காட்டினார்.

### சட்டமூலத்தின் 4-வது பிரிவு

"ஆகக்குறைந்த தண்டனை விதித்தல்" என்ற சட்டமூலத்தின் 4-வது பிரிவையும் எதிர்த்த திரு. சிவசிதம்பரம், இதனால் கூடுதலான தண்டனையை அனுபவிக்க நேரிடுகிறது என்றும் சொன்னார்.

குற்றச் செயல்கள் பற்றிய கடந்த வருட புள்ளி விபரங்களைக் கூறாது அமைச்சர் இவ்வருட விபரங்களை மாத்திரம் தெரிவித்ததில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதை பணிவுடன் கூறிக்கொள்கிறேன் என்றவர், இச்சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அவசரப்பட வேண்டாமென்றும் நீதித்துறையின் அதிகாரங்களையும்—உரிமைகளையும் பறிக்கவேண்டாம் என்றும், மாஜிஸ்ரேட் நீதிமன்றங்களில் நம்பிக்கை இல்லையா? என்றும் கேட்டார்.

### வரலாற்று உண்மை இது

யார் ஆட்சிக்கு வந்தாலும் பொலிசார்தான் அதிகாரத்தின் உச்சியில் இருக்கிறார்கள், இது இந்நாட்டிலுள்ள ஆச்சரியமான ஒரு வரலாற்று உண்மை அரசியல் சார்பற்ற பொலிஸ் அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள், ஆனால், சகலரும் அவ்வாறு இல்லை என்பதால் இச்சட்டமூலத்தை நாம் எதிர்க்கிறோம் என்று கூறி அமர்ந்தார் திரு. சிவசிதம்பரம்.

அடுத்து, பிரபல வழக்கறிஞரான 'வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அரசதரப்பில் வாதம் நிகழ்த்தினார்.

## தமிழக கிராமங்களுக்கு 'மினி'பஸ் சேவை

### அமைச்சர் அறிவிப்பு

சென்னை, மே 22

தமிழ்நாட்டில் பஸ் சேவைகள் இல்லாத கிராமப்புறங்களிலும் மினி பஸ் சேவைகளை ஏற்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகவலை தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் திரு. சி. பொன்னையன் வெளியிட்டார்.

ஆறு மாதங்களுக்குள் மேற்படி கிராமப்புறங்களுக்கு மினி பஸ் சேவை ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மதுரை மாநகராட்சித் தேர்தல்:

# தி. மு. க. உட்பட எந்த கட்சியுடனும் கூட்டு இல்லை

## இந்திரா காங்கிரஸ் முடிவு

சென்னை, மே. 22

மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துடனோ ஜனதா கட்சியுடனோ அல்லது வேறு எக் கட்சியுடனுமோ உடன்பாடு செய்துகொள்வதில்லை என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் முடிவுசெய்துள்ளனர்.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. தமது இம்முடிவை தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அறிவித்தார்.

மொழிப்பிரச்சினை பற்றியும செயற்குழு ஆராய்ந்தது. ஜவஹர்லால் நேருவின் உறுதிமொழிகள் செயற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. (உ)

**நாகம்மாஸ்**
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
நடித்த
**மூன்று முடிச்சு**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
**பெண் தெய்வம்**

**ராணி** (யாழ். நகர்)
காட்சிநேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்
சிவாஜி — மஞ்சுளா
நடித்த
# உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**சில தினங்கள் மட்டும்**
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
**ஊருக்கு உழைப்பவன்**

**Regal** (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
**Mexican Slay Rides**
Western Action Picture
(Cinemascope color)
Form 23-5-78
**FIVE CRAZY BOYS** (Colour)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி - விஜயா
**கிரகப்பிரவேசம்** (கலர்)


**விடேசா** போன்: 7693
ஜெமினி-சாவித்திரி
(யாழ். நகர்)
**கடன்வாங்கிக் கல்யாணம்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
தினசரி 4 காட்சிகள்
நடித்த
**ஜானகி சபதம்**
25-5-78 முதல் சிவாஜி-மஞ்சுளா-நாகேஷ்
நடித்த
**எங்கள் தங்கராஜா** (புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9 45
முத்துராமன், சுஜாதா, பத்மபிரியா, சோ.
**வாழ்ந்து காட்டுகிறேன்**
மே 27-28 திகதிகளில் காலை 8-30 மணிக்கு மட்டும் **Finist the Falcon**
26ம் திகதி முதல் எம். ஜி. ஆர். **ராமன் தேடிய சீதை**
புத்தம் புதிய பிரதி

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 3வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
**காலங்களில் அவள் வசந்தம்**
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news in colour

யாழ். வளாகத் தமிழ் மன்றத்தால் நடாத்தப்பட்ட தமிழ் விழாவில் பிரதம விருந்ினராகக்கலந்து கொண்ட அரஸ்லோ அதிபர் இவக்கருலூர் திரு. இ. அசாத் தினம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் அவருக்கு அருகில் யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## வயோதிபர் தற்கொலை

(கரணவாய்)

பாவிக்கப்படாத வாகிசாலை ஒன்றில் நஞ்சருந்தித் தற்கொலைசெய்துகொண்ட வயோதிபர் ஒருவரின் சடலம் நான்கு நாட்களின்பின் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. கொத்தாவத்தையைச் சேர்ந்த எஸ். கணபதிப்பிள்ளை (வயது 60) என்பவரே இவ்வாறே இவ்வாறு மரணமானவராவர்.

இவரின் மரணம் தொடர்பாக வல்வெட்டித்துறைத் திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ரி. வேலுப்பிள்ளை விசாரணை நடத்தினார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

இறந்தவரின் மனைவி மகேஸ்வரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்தவர் எனது கணவர். அவர் பல வருடங்களாக சித்தசுவாதீனமற்ற நிலையில் இருந்துவந்தார். அமாவாசை, பூரணை தினங்களில் அவர் எம்முடன் சண்டைபிடித்துவிட்டு மருந்துகுடித்துச் சாகப்போவதாகச்சொல்வார். நான்குநாட்களின் முன்னர் எம்முடன் சண்டைபிடித்துவிட்டு வெளியே சென்ற அவர் வழக்கம்போல சிலநாட்களின் பின் திரும்பிவருவாரென நினைத்து நாங்கள் அவரைத் தேடவில்லை.

வேறு பலரும் சாட்சியமளித்தபின் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (அ)

## மன்னாரில் நியமனம்

(உடுப்பிட்டி)

அண்மையில் புதிய குரவராகக் குருப்பட்டம் பெற்ற வண. பிதா ஆர். எச். சகாநாயகம் மன்னார்ப்பகுதி உதவிக்கட்டளைக் குரவராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

சங்கானையில்

## போத்தலில் கள் நிரப்பும் வேலைகள் ஆரம்பம்

(சங்கானை)

வட்டுக்கோட்டைத்தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்போத்தலில்கள் அடைக்கும் வேலையை ஆரம்பித்துள்ளது.

வலி- மேற்கு உதவி அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்குச்சொந்தமான மண்டபத்தில் இயங்கி வரும் இந்த நிலையத்தில் நாளொன்றிக்கு 1000 முதல் 1500 போத்தல் கள் அடைக்கப்பட்டு வருகின்றது.

இங்கு தயாரிக்கப்படும் கள்ளை மலைநாட்டிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கட்கும் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை வட்டுக்கோட்டைத்தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுவருகின்றது.

வலி. மேற்குப் பகுதியில் சேகரிக்கப்படும் மேலதிக கள்ளிலிருந்து எவரும் விரும்பி அருந்தக்கூடிய குளிர்பானங்கள் தயாரிப்பதற்கும் முயற்சிகளை நிர்வாகம் எடுத்துள்ளது.

அண்மையில் வட்டுக்கோட்டைத்தொகுதி தேசியபேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவினால் இந்த நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (உ)

## கட்டாக்காலிகள்: விவசாயிகள் முறையீடு

(உடுப்பிட்டி)

கரணவாய் வடக்கிலுள்ள தோட்டங்களில் கட்டாக்காலி ஆடுமாடுகளின் தொல்லைகளைச் சகிக்கமுடியாத விவசாயிகள் கரவெட்டிப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகத்திடம் நேரில் சென்று முறையிட்டதோடு தமது கஷ்டங்களை விளக்கி மகஜர் ஒன்றையும் கையளித்தனர். அம்மகஜரில் பிரஸ்தாப விவசாயிகள் தமது தோட்டங்களில் பயிர்களைக் கட்டாக்காலிகள் நாசம்செய்துவருவதால்தொடர்ந்து பயிர்ச்செய்கையிலீடுபட முடியாது துன்பமடைவதாகவும் உடன் இதுசம்பந்தமான நடவடிக்கை எடுத்து நிவாரணமளிக்குமாறும் கோரியுள்ளனர்.

## ஓய்வு பெறுகிறார்

(கரணவாய்)

பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை அதிபர் திரு. வி. என். பாலசுந்தரம் 34 வருடங்கள் தொடர்ச்சியாக அதிபராகப் பணியாற்றியபின் இளைப்பாறுகிறார்.

பருத்தித்துறையைச்சேர்ந்த திரு. பாலசுந்தரம் 1944-ம் ஆண்டு பருத்தித்துறை சின்னையா ஞாபகார்த்த பாடசாலையின் அதிபராகத் தமது சேவையை ஆரம்பித்து கொழும்பு தொண்டர் பாடசாலை வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் பாடசாலை பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை ஆகியவற்றில் அதிபராக அரும்பணி ஆற்றினார்.

இவர் இயல், இசை, நாடகத்துறையிலும் சமூகசேவையிலும் பெரிதும் ஈடுபட்டு வந்தார். 1956 ல் இருந்து 1959 வரை பருத்தித்துறை நகரசபை உறுப்பினராகவும் உப- தலைவராகவும் இருந்து சிறப்பான சேவையை நல்கினார்.

தேசிய அரசாங்க காலத்தில் சுகாதரார அமைச்சு சுகாதார தினத்தையொட்டி நடாத்திய நாடகப்போட்டியில் "மருந்துக்குப்பரிசு" என்ற நாடகத்தைஎழுதி நெறிப்படுத்தி தாமே நடித்து முதல் பரிசாக தங்கப் பதக்கத்தினை அன்றைய சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவிடமிருந்து பெற்றுக் கொண்டார். கொழும்பு விவேகானந்தசபை நடாத்திய பல்வேறு போட்டிகளிலும் இவர் பரிசு பெற்றுள்ளார். (அ)


**Rio** (Jaffna) Grand Release
Phone: 7607 Daily 4 shows
James Coburn & James Mason
in
**CROSS OF IRON**

2-வது உலக மகா யுத்தத்தில் இது ஒரு காப்பியக் கதை.

காரணம் தெரியாது ஒருவரை ஒருவர் கொன்று குவிக்கிறார்கள். அந்த நேரத்திலும் நுண்ணிய மனித உணர்வு மேலோங்கி நிற்கிறது.

1944-ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஜெர்மனியருக்கு யுத்தம் முடிந்துவிட்டது. ஆனால் சார்ஜண்ட் ஸ்ரெயினருக்கோ அப்போதுதான் யுத்தம் தொடங்குகிறது.

உருக்கமான விறுவிறுப்பூட்டும் காட்சிகள் நிறைந்தது.

ஏழு வருட முடிவில்

# 'ரெண்டர்' இல்லாமல் கடைகளை வழங்க இணக்கம்

## யாழ். எம். பி. முயற்சி பலிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் போது யாழ் பஸ் நிலையத்தில் எரிக்கப்பட்ட கடைகளுக்கும் பதிலாகக் கட்டப்பட்ட புதிய கடைகள், அக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட கடைக்காரர்களுக்கே மீண்டும் வழங்கப்படும்.

ஏழுவருடமுடிவில், மீளவும் அதே கடைக்காரர்களுக்கு கடைகள் தேவையானால் அந்நேரத்திற்கேற்ற வாடகை மாற்றத்துடன் வழங்கப்படும் என்று உள்ளூராட்சி அமைச்சர் யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரனுக்கு உறுதியளித்துள்ளார்.

ஏழுவருடமுடிவில் கடைகளை 'ரெண்டர்' மூலம் வழங்குவதென்று முன்னர் எடுக்கப்பட்ட முடிவை மாற்றும்படி கோரி யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சர் பிரதமர் பிரேமதாசாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். இப் பேச்சுவார்த்தையின் போது ஹோட்டல் கூட்டுத்தாபன பிரதித் தலைவர் ஜனாப் மஹ்ரூப் மௌலானாவும் எம். பி. யுடன் கூட வந்திருந்தார்.

பேச்சுவார்த்தையின் பின் ஏழு வருடமுடிவில் அதே கடைக்காரருக்கு வாடகை மாறுதல் ஏதாவது ஏற்படின் அம்மாறுதலுடன் கடைகளை வழங்குவதென்று அமைச்சர் உறுதி கூறினார். பேச்சுவார்த்தையின்போது உள்ளூராட்சி அமைச்சின் பிரதமசெயலாளர் திரு. பாஸ்கரலிங்கமும் பங்குபற்றினார். (கி)

ஹவானா மாநாடு:

# ஜே. ஆர். ஆலோசனையை ஏற்றுக்கொண்டது

ஹவானா, மே 22

உலக ஆயுதப்பரிகரண அதிகாரபீடம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்ற இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனை முக்கியத்துவத்தை ஹவானாவில் அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் மட்டத்திலான பணியகம் ஏற்றுக்கொண்டது.

இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இம் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். இலங்கையின் மேற்படி ஆலோசனை ஆயுத உற்பத்தி, ஆயுத சேகரிப்பு, ஆயுத போட்டாபோட்டி என்பனவற்றைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. [உ]

## மின்சார வசதி

(காரைநகர்)

புங்குடுதீவு இருபிட்டி கிராமத்திற்கு மின்சாரவசதி அளிக்கப்படவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை மின்சாரசபை மேற்கொண்டுள்ளது. தற்போது இருபிட்டி உபதபால் நிலையம் வரையே மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. [உ]

ருஷ்ய தீர்ப்பு

## மே. ஜெர்மனியும் கண்டனம்

லண்டன், மே. 22

அரசுக்குவிரோதமான சஞ்சிகைகளை வெளியிட்டதான குற்றச்சாட்டின் பேரில் சோவியத் யூனியன் அரசு யூரிஹோவ் என்பவருக்கு 7 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததை மேற்கு ஜெர்மனியும் கண்டித்துள்ளது. இதுபற்றி மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சர் திரு. ஜென்ஷர் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கு ஜெர்மனின் சட்டமும் மனிதாபிமானமும் என்ற கொள்கைக்கு சோவியத்யூனியனின் இத் தீர்ப்பு முரணாக உள்ளது என்று தெரிவித்தார். 1975-ல் செய்து கொள்ளப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு உடன்படிக்கையை சோவியத்யூனியன் இப்போது மீறுவதாக உள்ளது என்றும் அவர் சொன்னார். யூரிஹோவ் என்பவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டதை அமெரிக்கா ஏற்கனவே கண்டித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## தேசிய வீரராக சுகர்னோ

ஜாகர்த்தா, மே. 22

காலஞ்சென்ற ஜனாதிபதி சுகர்னோவை ஒரு தேசிய வீரராகக் கௌரவிப்பதென்று இந்தோனேஷிய ஜனாதிபதி சுஹார்ட்டோ அறிவித்துள்ளார்.

## யாழ். பொலிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுவதற்காக வரும் பொழுது பாதுகாப்புப்படையைச் சேர்ந்தவர்களால் இடையூறு ஏதாவது ஏற்படக் கூடும் என்று இச்சந்திப்பின் போது அச்சம் தெரிவிக்கப்பட்டதாகவும் இதுபற்றி அஞ்சத் தேவையில்லையென்று அதிகாரிகள் உறுதியளித்ததாகவும் அறியப்படுகிறது.

"தேடப்படுபவர்கள்" என சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் இந்த இளைஞர்கள் விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் இவர்கள் தேடப்படவேண்டிய" நிலையில் இல்லையென்பதையும் இரு எம். பிக்களும் அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியதாகத் தெரிகிறது.

பொதுமக்களுக்கு அசௌகரியம்?

இராணுவமும் பொலிசாரும் வீடுகளில் சோதனையிடும் போது பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதாகவும் எம். பிக்கள் எடுத்துக் கூறியதாகவும் தெரிகிறது.

சோதனையிடுகையில் எவ்வித தொல்லைகள் ஏற்பட்டாலும் சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியிடம் அல்லது எம். பிக்கள், உதவி அரசாங்க அதிபர்களிடம் புகார்செய்யலாம் என்று அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

பொதுமக்களில் சிலர் பாதுகாப்புப்படை வாகனங்களைக் கண்டு அநாவசியமாக மிரளுவதால் அவர்களைச் சந்தேகித்து விசாரிக்கவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனராம். [மட்டு. நி]

விக்கிரக திருட்டு:

## விசேஷ நீதிமன்றம் அமைக்க முயற்சி

சென்னை, மே 22

ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டுப்போவதைத் தடுப்பதற்கு விசேஷ நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசு முடிவுசெய்துள்ளது.

விக்கிரகங்கள் திருட்டுப் போவது சம்பந்தமாகக் கவனிக்க பொலிஸ் நிலையங்களில் தனிப்பிரிவுகள் இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளன. இத் திருட்டுகள் பற்றி விசாரணை செய்வதற்கு விசேஷ நீதிமன்றங்களை ஆரம்பிப்பது பற்றி தமிழக அரசு இப்பொழுது யோசித்து வருகிறது.

## பேக்கரியில் ரூ. 7,000 திருட்டு

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு நேரத்தில் பேக்கரி ஒன்றில் கடமையாற்றிய இரு ஊழியர்கள், அங்கிருந்த மேசைலாச்சியை உடைத்து 7,000 ரூபாவை திருடிக்கொண்டு மறைந்துவிட்டதாகக் கூறப்படும் ஒருசம்பவம் பண்டத்தரிப்பில் நிகழ்ந்துள்ளது.

பண்டத்தரிப்பிலுள்ள ஒரு பேக்கரியிலிருந்த மேசைலாச்சி உடைக்கப்பட்டு அதிலிருந்த ரொக்கப்பணம் 7,000 ரூபா திருடப்பட்டுள்ளதாகவும் அதேநேரத்தில் இந்த பேக்கரியில் வேலைபார்த்த ஸிறிசேன, சரத் ஆகிய இரு வாலிபர்களைக் காணவில்லை என்றும் இந்த இரு வாலிபர்களுமே இந்த பணத்தை திருடிச் சென்றிருப்பதாக தாம் சந்தேகப்படுவதாகவும் மேற்படி பேக்கரி உரிமையாளரான ஹென்றி என்பவர் சண்டிலிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சண்டிலிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். இராசையா விசாரணை நடத்தி வருகின்றார்.

## ஊழியர்கள் செலவில் பல்ப்

(யாழ்ப்பாணம்)

கடந்த 9 மாதகாலமாக யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் தபால் சாக்குகளை தரம்பிரித்து செயல்படும் இடத்திலுள்ள மின்சார பல்ப் எரியாமல் இருந்தநிலை மாறியது. இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் பலன்கிடைக்காததால்; தபால் உத்தியோகத்தர் திரு. க. நடராஜா தமது ஊழியர்களின் உதவியுடன் பணம் திரட்டி பல்ப்வாங்கிப் போட்டுள்ளார். ஐந்து ஊழியர்கள் இதற்குநிதி உதவியுள்ளனர். (கெ-உ)

## லலிதாம்பிகைக்கு தங்கப் பதக்கம்

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி மு. லலிதாம்பிகை கொழும்பு விவேகானந்த சபையினரால் அகில இலங்கை ரீதியாக இவ்வாண்டு நடாத்தப்பட்ட சமயப் போட்டியில் முதல் பரிசான தங்கப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார்.

பரிசுபெற்ற செல்வி மு. லலிதாம்பிகை கல்லூரி இந்து மாணவர் மன்றத் தலைவியுமாவார். கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த இம்மாணவிக்கு கல்லூரி அதிபர் திரு. எஸ். அருணாசலம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் ஆகியோர் பாராட்டுத் தெரிவித்தனர். (உ)

கிளிநொச்சியில் இன்று

# தந்தை செல்வா — ஜி. ஜி. நினைவாஞ்சலிக் கூட்டம்

## 15 ஆயிரம் பேருக்கு அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த தமிழ்த்தலைவர்களான தந்தை செல்வா, ஜி. ஜி. பொன்னம்பலம் நினைவுக்கூட்டம், இன்றுமாலை கிளிநொச்சி முற்றவெளி மைதானத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறும்.

நினைவு தினத்தையொட்டி பகல் கிளிநொச்சி கந்தசாமி கோவில் மண்டபத்தில் 15,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

நினைவுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், கூட்டணி எம். பி.க்கள், இளைஞர் பேரவைத் தலைவர்கள், மகளிர் பேரவைத் தலைவிகள் ஆகியோர் உரையாற்றுவார்கள். (செ)

மீஸாராம் சட்டசபைத் தேர்தல்:

# மக்கள் மகாநாட்டு கட்சி வெற்றி

புதுடில்லி, மே 22

யூனியன் பிரதேசமான மீஸாராம் சட்ட சபைக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட ஜனதா, காங்கிரஸ் மற்றும் சுயேச்சைகளை கள் படுதோல்வி கண்டுள்ளனர்.

30 ஆசனங்களைக் கொண்ட இச்சட்டசபை தேர்தலில், மக்கள் மகாநாட்டுக்கட்சி, (இன்றிரவுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி) பதினெட்டு ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப்பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது. 4 முன்னாள் அமைச்சர்கள் தோல்வி கண்டுள்ளனர். 11 சுயேச்சையாளர்கள் உட்பட 41 அபேட்சகர்கள் ஜாமீன் தொகையை இழந்துள்ளனர்.

## பூட்டோ உண்ணாவிரதம்: தேநீர் அருந்தவும் மறுப்பு

லாகூர், மே. 22

தமக்கு சிறைச்சாலையில் அளிக்கப்பட்ட வசதிகள்போதவில்லை என்று கூறி ராவல்பிண்டிச் சிறைச்சாலையில் கடந்த புதன்கிழமை முதல் உண்ணாவிரதம் இருந்துவரும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோ தேநீர் அருந்தக்கூட மறுக்கிறாராம்.

தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து இவர் தாக்கல் செய்துள்ள அப்பீல் மனுமீதான விசாரணை லாகூர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது. [உ]

## ஸியாவுல்...

(1-பக்கத்தொடர்ச்சி)

உயர்மட்ட ரீதியில் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதமர் பூட்டோ இப்பொழுது சிறைவைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து சில நூற்றுக்கணக்கான யார் தூரத்திலேயே, பாகிஸ்தான் பிரதம இராணுவ நிர்வாகியின் செயலகம் உள்ளது.

## மருத்தித்துறையில் போர்டா நாட்டின் கதிர்ப்பாத்திரம்

(உடுப்பிட்டி)

போர்டா நாட்டில் 156 வருட காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டுவரும் புதுமை பொருந்திய கதிர்ப்பாத்திரம் உலகம் பூராகவுமுள்ள திருக்குடும்ப கன்னியர் சபைகளுக்கு ஆராதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டபோது இலங்கையில் இவ்வகையில் வடபகுதிக்கும் கொண்டுவரப்பட்டது.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறைப் பகுதிக்கும் இப்புனித கதிர்ப்பாத்திரம் கொண்டுவரப்பட்டது.



## மரண அறிவித்தல்

### முருகர் சின்னத்தம்பி

அளவெட்டியைச் சேர்ந்தவரும், கோண்டாவில் சாலை இ. போ. சபை சாரதியுமான முருகர் சின்னத்தம்பி இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் முருகர், சிதேவியின் அன்பு மகனும், இராசமலரின் அன்புக்கணவரும், ஜெயந்திமலர், ராஜினி, சியாமளா, சிறிஸ்கந்தவேலின் தந்தையும், நாகமணி (ஓமான்), செல்லத்துரை, ஐயாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மீனாட்சி, செல்லையின் மருமகனும், தெல்லிப்பளை மதுபான விற்பனை நிலைய உரிமையாளர் ஆறுமுகத்தின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (23-5-78) செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணியளவில் அளவெட்டி 8ம் கட்டையடி அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மல்லாகம் கோட்டடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 9363



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்க்காக ... யாழ்ப்பாணம் ... 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenaadu" Telephone 289. Registered as a Newspaper in SriLanka.